




ஓலை 199| ஓசை 322| நவம்பர் 2026

அகர முதல இலக்கியப் பேரவை



உவமை கவிஞர் சுரதா

கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ம] சிவம் அறக்கட்டளை



திருக்குறள்

குறள்

விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது

பொருள்

வானத்திலிருந்து மழைத்துளி விழாவிட்டால்,
பூமியில் பசும்புல் கூட முளைப்பது அரிதாகிவிடும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com



நிறுவனர்

செல்வமுத்துகுமரன்
குணசேகரசிவம்

ஆசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

ச.சூர்யா, அ.வில்சன்

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

காதலிக்கு ஒரு மடல்!

பாவகை : நேரிசை அகவல்

அஆஇஈ என்றே எழுத்துக் கூட்டி
அகரம் வாசிக்கும் முன்பே வந்து,
அரிச்சு வடியும் கற்கும் முன்பே
அரிதாய் என்னில் உதித்தக் காதல்;
திண்ணைப் பள்ளியில் திகட்டா முப்பாலில்
என்னையே ஈந்து ஏற்றக் காதல்;
குருதி, நாளம், நாடி, நரம்பில்,
உருவம் முழுவதும் ஊறியக் காதல்;
மொத்தம் நாளும் குடிக்கும் காதல்;
முத்துக் குளித்துத் திகட்டாக் காதல்;
நானும் பருக, பிறரும் பருக,
ஊனும் உருக வைக்கும் என்தமிழ்க்
காதலி மீது கண்மூடித் தனமாய்,
ஆதி வந்த அருந்தமிழ்க் காதலிக்
கொற்றைக் கவிதை மடலாய் வரைந்தேன்;
எற்றை நாளும் என்னுயிர்க் காதலி
உன்னைப் போலொரு ஆரணங்கான
என்புறுக் கிடும்சீர் காதலி வேறிலை;
உன்னுள் எத்தனை இன்பம் வைத்து,
நின்று உயிர்க்கும் சிறப்பைப் பெற்றாய்;
முற்றும் வைய மெங்கும் ஓங்கி
வாழிய என்தமிழ்க் காதலி
வாழியவே! இவ்வையம் வாழ்ந்திட வாழியவே!



1. ஒளியே இருளை உறங்க அனுப்பும்
அளியுடன் வாழ்ந்தால் அமைதி நிலவும்
எளிமையைப் பேணி இடரை விலக்க
களிப்புடன் நாமும் கடமையை ஆற்றி
இளிவை அகற்ற இளக்கம் அடைந்தால்
தளிமமாய் நாளும் தறுகண் நிறைக்க
நளியும் உறவுமே நன்னயம் பெற்றே
தளிர்க்கும் பசுமையுந் தான்.

****

2. ஒளியேற்ற வாழ்விலே
ஓங்கும் தறுகண்
களிப்பூட்டும் இன்பம்
கரைந்திடும் இன்னல்
எளியோர் வளர்வரே
ஏற்றம் பெறுவரே
இளிவுமே நீங்க
இனமும் உழைக்கும்
அளிநிறை உள்ளம்
அகவி மகிழும்.
தளிர்க்கும் உறவின் தரம்.



உள்ளொலி

பா வகை - அறுசீர் மண்டிலம்

காய் மா மா
காய் மா காய்



எப்பொழுதும் ஏதோ ஒன்றை
இரைச்சலிட்டுக் கொண்டே இருக்கிறது
முப்பொழுதும் எதையோ நினைவும்
முந்திவந்து சொல்லிச் செல்கிறது
அப்பப்பா இதுவும் என்ன
அலைகளென எழுந்தே வருகிறது
செப்பனிடும் எண்ணம் ஒன்றே
செழிப்பதற்கு வழியும் சொல்கிறது

உள்ளொலியைக் விடவா முடியும்
ஒருங்கிணைக்க மறுத்தால் நோய்வெடிக்கும்
உள்ளுணர்வை வைத்தே இங்கு
உருட்டிடுதே அச்சம் பின்தொடர்ந்து
பள்ளத்தில் பாயும் நதியாய்
பாழ்மனத்தில் ஓயா தோடிடுமே
வெள்ளமென தாக்கிப் போகும்
வெடுவெடுக்கச் செய்யும் மனவோட்டம்

காத்திடத்தான் வழியும் இருக்கா?
கண்களதை மூடிக் கேட்கிறேன்நான்
பார்த்திடுமோர் காட்சி எல்லாம்
படமாக பேசும் தனிமையிலே
வார்த்தையின்றி மௌனம் தரித்து
மனகுகைக்குள் தியானம் செய்திட்டால்
நேர்மறையில் எண்ணம் செலுத்தி
நிமிர்த்திடுமே திடமாய் வலிமையுடன்

கவிஞர் பூர்ணிமா சங்கர்

தேடல்

தொலைந்த
என் சிரிப்பொன்றை
தேடிக்கொண்டிருக்கிறேன்.

அந்நேரம் வழி தவறிய
கொலுசொன்றை
காண நேர்கிறது.



யாருமற்ற சாலையில்
தனிமையில் இருக்கும்
அவள்;
காதலின்
வருகைப் பதிவேட்டில்
என்னிடம்
கையெழுத்து கேட்டு
நிற்கிறாள்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

விளக்கில் மாயும்
விட்டில் பூச்சிகளாய்
வினைதனைப் புரியாமல்
விளைவுகள் எங்கிருந்து?

கைபேசி ஏக்கத்தில்
கைகள் இங்கே
கையூட்டு இன்றி
கையாடல் செய்யப்பட்டதோ?

நிலாக்கதை சொல்லி
நில்லாமல் குதூகலித்த
நிலவொளியின் வெணதகப்பு
நினைவுகளாகி விடுமோ?

இதயத்தில் சின்ன
இதமான நினைவுகளை
இனி தேடவேண்டுமோ?
இல்லை என்றாகிடுமோ?



அம்மாவிடம் ஆசையாய்
அகழ்வாராய்ச்சியில் பக்கரை
அவிழ்த்தே காசுக்காய்
அரண்டு போனதாய்.

விழுப்புண்கள் விளையாட்டிலே
விண்ணை முட்டும்
விசாலமான கையொலி
விசித்திரமாய் ஆயிரமாயிரம்.

கில்லியும் சிங்காங்குச்சியும்
சிகரம் தாண்டிய
சிங்காரப் பந்துகளும்
சிதறிப் போனதோ?

விஞ்ஞான வீரியத்திலா
வீழ்ந்ததோ இளமைகளே!?

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

சிதைத்தவர் முன்னே சிறகடித்துப் பறப்பாள்!
சீரழிக்க நினைத்தவர் செருக்கினை உடைப்பாள்!
வஞ்சத்தின் நெருப்பிலும் வைரமாய்த் திகழ்வாள்!
வன்மத்தின் நிழலிலும் வாளென நிமிர்வாள்!

கண்ணீரை விழுங்கிக் கனலாக மாறினாள்!
கயவரின் சூழ்ச்சியைக் காலடியில் மிதித்தாள்!
அடிமைத் தளைகளை அறுத்தெறிந்து நடந்தாள்!
அநீதியின் முகத்திரை கிழித்தெறியத் துணிந்தாள்!

வீழ்த்திய விதியையும் வெற்றியால் வெல்வாள்!
வெறுத்தவர் முன்னே வரலாறாக நிற்பாள்!
உடைந்தவள் அல்லள் — உருக்கப்பட்ட எஃகு!
சிதைக்கப்பட்டவள் இன்று சரித்திரம் படைப்பாள்!



கவிஞர் நிஸ்ரினா மதீனா, மாத்தளை



உறைந்த பனிக்கட்டியின் குளிர்மை போலவே
அல்லல் கண்டு உருகாத மனமே!
சுவர் இல்லாச் சித்திரம் போலவே,
ஈரமில்லாத இதயக்கல் சிற்பம் போலவே,
அன்பின் விலாசம் இழந்த அகங்கள்,
அறத்தின் நெறி மாறிய மானுடக் கோலங்கள்!
ஈர நெஞ்சில் ஈட்டி பாய்ச்சும்
கண்ணீர் சிந்தாக் கல்நெஞ்சக் காலமிதுவே!
பண்டைத் தமிழ்ப் பண்பாட்டின் பாசப் பிணைப்புகளையும்
தூக்கியெறிந்துவிட்ட சுயநலச் செருக்குகளே!
நடமாடும் நிழல் முகமூடி உருவங்களே,
சொல்லால் மட்டும் பெரிய மனிதர்களே,
செயலால் வறண்ட பாலைவனப் புதர்களே!
அகத்தில் இருளும் முகத்தில் போலியுமாகவே
இருள் கொண்டு திரியும் வாழ்க்கை!
சுடர் கெட்ட, ஒளியிழந்த ஆன்மாக்களே,
அறம் தோற்ற இடத்தில்தானே
அகம் தொலைத்த முகங்கள் உலவுகின்றனவே!

கவிஞர் சுகுமாரி சுந்தரராஜன், விருதுநகர்



ஊரெல்லாம் ஒளியின் வெள்ளம்
எனக்கு மட்டும் காரிருள்

அனைவரும் அண்டை அயலாருடன்
நான் மட்டும் தனிமையில்.

புத்தாடையும் பலகாரமும் பலவிதமாக.
கடந்த வருடம் வரை நம் வீட்டிலும்.

ஆனால்
நீயின்றி எனகெதற்கு இதெல்லாம்.

மண்ணில் கொண்டாடும் பட்டாசின் ஒளியில்
விண்ணில் இருக்கும் உனை காண்கிறேன்.

வீட்டில் ஏற்றிய தீபத்திலும்
உன் முகம் தேடி கண்ணீர் விடுகிறேன்.

தீப ஒளி திருநாள் வாழ்த்துக்கள்.
கூறுவோம்.

நான் உன்னை நோக்கி
நீ என்னை நோக்கி.

கவிஞர் சுமதி தசரதன், சென்னை

மழைக்குள் நனையும் சிறு குருவி நான்
வெயிலுக்குள் ஒளியும் நிழலும் நான்



எனக்குள் ஒரு வீடு கட்டினேன்
அதில் நானே ராணி
எனக்குள் ஒரு கடல் வளர்த்தேன்
அதில் என் கண்ணீர் உப்பானது

யாரும் கேட்காத போது
என் மௌனம் பேசியது
யாரும் இல்லாத போது
என் எழுத்து துணையானது

நான் தொலைந்தேன் என்று நினைத்தேன்
உண்மையில் என்னை தேடினேன்
ஒவ்வொரு இரவும்
விளக்கின் கீழ் மீண்டும் பிறந்தேன்

என் பெயர் இன்று சஹானா
பொறுமையின் மறு பெயர்
இது புனைப்பெயர் அல்ல
இது என் மறுபிறப்பு

இந்த உலகம் இனி என்னுடையது
என் வார்த்தைகளால் ஆனது.

கவிஞர் நஸ்ரினா, குருணாகல் (இலங்கை)

அன்பினில் விழுந்தேன்
அன்னத்தின் நேசத்தில்
ஆசைகளை வளர்த்தேன்
ஆரணங்கின் எழிலில்

இதயத்தைத் தொலைத்தேன்
இனியவளின் இதழ்களில்
ஈர்த்திட்டப் பாவையே
ஈரேழு பிறவிக்கும் நீதான் தேவையே



உள்ளமது மகிழ்வாகிடவே
உன்னிடம் சரணடைந்தேனே
ஊஞ்சலாடும் கனவினில்
ஊதாப்பூவாய் கண்சிமிட்டுகிறாயே

எனக்கான தேவதையே
என்னுள் வாழ்பவளே
ஏந்திழையின் வம்சமானவளே
ஏகாந்தம் எனக்கில்லையே

ஐயிரண்டு விரல்களில்
ஐக்கியமானேன் கண்ணே
ஒன்றானப் பாசமதில்
ஒருபோதும் பிரிவில்லையே

ஓய்ந்திடாத நினைவுகளில்
ஓயாது உனது ஞாபகங்களே
கனிவானேன் காரிகையே
கசிந்து உருகுகிறேன் அன்பே

காதலால் வசியமாக்கிய
கார்குழல் வஞ்சியே
கைத்தலம் பற்றிடுவேன்
பேசும் பொற்சித்திரமே

காத்திருந்த நாட்களெல்லாம் இனிதானதே
காலமெல்லாம் உன்னுடனே வாழ்ந்திருப்பேன்

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

க. தகைமை சிதைக்கும் பிறழ்மொழி மல்கின்
பகைமை தழைக்கும் நிலம்.

உ. முரண்படும் ஒப்புமைக் குற்றம் பெருகின்
புரத்தல் முறிக்கும் புழை.

ங. மருணிறை நெஞ்சில் பகைமை பெருக
திருவருள் நீங்கும் மனை.

ச. ஆறுதல் அறுபட்டு இணக்கம் இலாமல்
ஒறுத்தல் ஒழுகும் அகம்.

ஞ. கற்றல் பருவக் களிப்பின் பதிவுகள்
குற்றம் திருத்தும் துணை.



உழவர்கள்

பாவகை : நேரிசை ஆசிரியப்பா

இந்திரன் வணங்கியே இயங்கி நித்தம்
எந்திரம் இணையாய் ஏற்றமும் இறைத்துமே
வயலில் நீரை வாங்கிடும் அளவிலே
நயமாய்ப் பாய்ச்சி நல்லதோர் பலனை
நாடிடும் உழவர் நன்மை பெற்றே
காடினைத் திருத்தியே கழனி காண்பர்!
வைகறை எழுந்துமே வயலுள் சென்று
காகமும் விடியலில் கரையும் முன்பே
நெற்கதிர் அறுத்துமே நெடிதென அடுக்கி
வற்றாப் பாலின் வாகு போன்ற
நெற்கள் தந்தே நித்தம் காத்து
வற்றா ஊணினை வழங்கியே மகிழ்வர்!
தூக்கினில் பழையதைத் துவையல் சேர்த்தே
நாக்கினில் சுவைபட நலமாய் உண்டே
காக்கும் தெய்வம் காவலைத் தொழுது
வாக்கினில் தவறா வாய்மையின் வழியிலே
அணியாய்ச் சென்றே ஆடிப் பாடியும்
பணியைச் செய்தே பாங்குடன் வயலினில்
மணியாய் நெல்லினை மலையெனக் குவித்துமே
வணிகம் செய்குவர் வகையாய் நன்றே!
துன்பமும் வருமிடைத் துவளா நெஞ்சும்
இன்பமும் வருமிடை இயல்பென நடந்தே
நன்றுமே வயலை நாடியே உழைத்து
பன்முகப் பணியும் பண்பின் செய்தே
என்புதோல் உடலாய் ஏவலின் குடையில்
அன்புடன் பணியை ஆர்வமாய்ச் செயலாற்றி
நன்றெனச் சிறுவரை நலமாய்ப் பள்ளியிலே
இன்மையை மறந்துமே இனிதாய்ச் சேர்த்து
நன்றதன் வழியில் நாளும்
நன்றியின் விதையென நயமுடன் நடப்பரே!



கவிஞர் முனைவர் மு. செல்வி, தூத்துக்குடி

அனுமதியின்றி
அலைந்து திரிகிறது
தென்றல்.

பட்டுப் போன மரத்தில்
பளிச்சிடும் வைரங்கள்
பனித்துளிகள்.

உடைந்தாலும்
உறுதியளிக்கிறது
உள்ளம்



பணத்தைத் தேடிடும்
பாசத்தைத் தொலைத்திடும்
மனத்தால் நிம்மதியற்றே
மௌனத்தில் அழுதிடும்

பிள்ளையைக் காணாது
பெருத்திடும் சோகம்
பிணியே வந்தாலும்
தனித்திடும் வாழ்வு

இல்லாளைத் துறந்தே
ஏக்கத்தில் தவிக்கும்
சொல்லவும் முடியாமல்
சுணங்கியே கிடக்கும்



வளமையைத் தேடியே
இளமையைத் தொலைக்கும்
வறுமையைப் போக்கிட
தனிமையில் உழைக்கும்

இரவுகளெல்லாம் இழந்துவிட்ட
உறக்கத்தைத் தேடிடும்
உறவுகளெல்லாம் உள்ளத்தோடு
நம்மையே பிணைத்திடும்

தெரிந்தவர் யாருமற்றே
சிறையெனக் கழியும்
பரிவற்ற வேலையில்
பணமே நிறையும்

ஊருக்குள்ளே சீமைக்காரனென
ஒய்யாரப் பேச்சு
உள்ளபடிப் பார்த்தால்
உணர்வெல்லாம் போச்சு

வெறுமையை விதைக்கும்
வெளிநாட்டு வாழ்வில்
வறுமையைப் போக்கலாம்
வாழ்வையும் இழந்தபடி.

கவிஞர் இளையவன் சிவா



பற்றுதல் இல்லையா?
பற்றுவதற்கு ஏதுமில்லையா?
ஒரு கல்லை பற்றிக் கொள்
உற்று நோக்கு
உள்ளே ஒரு சிலை இருப்பது
புலப்படும்

தேவையற்றதை அகற்று
தேவையானது வெளிப்படும்
கருவறைக்குள் வைத்து வணங்கு!
அது உயிர் பெறும்
கண் திறக்கும்
உந்தன் கண் திறக்கும்

காட்சிகள் புலப்படும்
நீள அகலம் விளங்கும்
மாட்சிமை புரியும்
வாழ்க்கை என்னவென்று விளங்கும்

உள்ளீடற்றது அல்ல!
உள்ளேயிருப்பது!

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

அனிச்சம் பூ



தூரக் கிழக்கில் தெரிகிறது
ஒரு தொடுபுள்ளி!

கணக்கற்ற கதைகளோடு
நாள்தோறும் நடைபயின்று
அவை அனுப்பி வைக்கும்
சேதிகளில்தான்
எத்தனை ஆலாபனை!

வெகுநாள் கழித்து
என் விருப்பத்தின் வழியில்
மலர்ந்து நிற்கிறது
அனிச்சம் பூ ஒன்று!

புறப்பட்ட வேகத்தில்
மேடு பள்ளம் அறியாமல்
காற்றின் சிக்கலில்
முட்டி மோதி எழுந்து பறக்கிறது
என் மனமென்னும் காற்றாடி!

ஒருநாள் ஒரு கனவில்
வழிந்தோடும் நதி நீரில் மிதந்து வருகிறது
நான் பார்க்க மறந்த
உன் புன்னகை!

இதுவரை எழுதிப் பார்க்காத
உன் பெயரை
அந்தியின் வண்ணத்தில் குழைத்து
தீட்டிப் பார்க்கிறேன்!

என்னிலிருந்து விடுபடும்
ஒவ்வொரு மூச்சுக் காற்றும்
உன் கொடுபடா முத்தத்தில் சேர்த்தி!

தொலைதூரம் நீண்டு கிடக்கிறது
நீயும் நானும் மட்டும்
கடக்க நினைத்த காலடித் தடம்!

அதோ அந்த
தூரக் கிழக்கில் தெரியும்
தொடுபுள்ளி மட்டுமே அறியும்
என் விடை காணாக் கனவின் விருப்பங்கள்!

கவிஞர் யாழிசை செல்வா, தேனி மாவட்டம்

நீயே என் துணையாவாய்

இதயத்தின் வேதனை
இன்று உன்னை காணாமல் நான் கண்டேன்
வாரம் ஒருமுறை
உன்னைக் காண காத்திருப்பேன்
வந்ததே வந்ததே விழியில் கண்ணீர்

நீ தரும் மனமகிழ்ச்சி
நிறை அளவிட முடியாது
பிறையாய் உன் மீது தாகம் வளர
சிறையில் அகப்பட்ட காதலியாய் நானும்

தனிமையாய் இருந்த என்னை
வனைவதற்கு சிறந்த களி தந்தாய்
உருவம் கொடுப்பதற்கு
கருவாக்கி கொடுக்க நல் தலைப்பாய் நீ வருவாய்



வாரா வாரம் வருவாயே
வார்த்தையால் சுகம் தருவாயே
ஏன் இப்படியானாய்?
ஏமாற்றிவிட்டு மறைந்து பார்க்கிறாயா

ஏன் என்னோடு உனக்கு விளையாட்டு?
ஏக்கம் ஒன்றே ஏமாற்றிவிட்டாய்
அதுமட்டும் நிஜம்
ஆனால்
நான் உன்மீது வைத்துள்ள காதலை
நிறுத்திவிடமாட்டேன்

அது ஏனோ தெரியவில்லை
நீதான் என் தனிமைக்கு சுகமானாய்
இனியும் என்னை ஏமாற்றி விட நினையாதே
இன்றில்லை எப்போதும் நீயே என் துணையாவாய்

கவிஞர் ஜவனிற்றா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

இடுப்பில் ஏறிக் கொண்டு
இறங்க மறுத்து
அடம் பிடித்துச் சிணுங்கும்
கைக்குழந்தை போல்
இந்த வானம் காலை முதல்
தூறிக் கொண்டே இருக்கிறது.



பாவம் ஆடுகள் எல்லாம்
ஒண்டிக்கொள்ள இடம் தேடி
அலைகின்றன.

நடைபாதை வணிகர்கள்
இன்னிக்குப் பொழுது
இப்படித்தான்னு நம்ம தலைவிதி
இப்படித்தான் புலம்புகின்றனர்.

மின்கம்பிகளில் வரிசையாக
அழகாக அமர்ந்திருக்கும்
காக்கைகள் எல்லாம் அடிக்கடி
சிறகுகளைச் சிலுப்பி
சிறிதளவு உலர்த்திக் கொள்கின்றன.

எதைப்பற்றியும் கவலைப்படாமல்
ஜோராக நடக்கும் மோசமான
டாஸ்மாக் வணிகம்போல்

ஓர் எருமை நாடு
மெதுவாகப் போகிறது.

கவிஞர் வளவ. துரையன், முகலிவாக்கம்

உந்தன் விழிகளின்
மொழிகளில் நான்
எழுத்துப் பிழைகளாய்!



உந்தன் முகத்தின்
வசீகரத்தில் நான்
தொலைந்த பார்வைகளாய்!

உந்தன் உதட்டுச்
சொற்களில் நான்
பேசும் ஊமையாய்!

உந்தன் அழகியலின்
முன்னே நான்
அன்பின் அசைவுகளாய்!

உந்தன் காதலின்
அகராதியில் நான்
வாசிக்கப்படும் வார்த்தைகளாய்!

பெண்ணே, உன்னால்
நான் என்றும்
உயிர்த்தெழும் உற்சாகமாய்!

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

கானல் நீரின் தகிப்பில்
கால்நடையாய் நடக்கும் மனிதர்களுக்குத்
தோள்சுமை இறக்கி வைக்க
வழியோரம் விழித்திருக்கும்
அகதிகளின் அடையாளம்!

வார்த்தைகள் பேசுவதில்லை அது.
ஆனாலும்,
இளைப்பாறிய மனிதர்களின்
பெருமூச்சுக் கதைகளை
அதிசயமாய் உள்வாங்கிக் கொள்கிறது!



காலங்கள் மாறலாம்,
சாலைகள் தாராகலாம்,
வாகனங்கள் பறக்கலாம்.
ஆனால்,
வியர்வை சிந்திய உழைப்பாளியின்
வலியைத் தீர்த்த
அந்தக் கருங்கல் சுமைதாங்கியை
வரலாறு மறப்பதில்லை!

பெற்ற பிள்ளையின் பாரம் தீர்க்க
தன் வாழ்நாள் முழுக்கத்
தேய்ந்து தேய்ந்து உழைக்கும்
பெற்றோரின் வடிவமே சுமைதாங்கி!

உலகத்தின் சுமைகளை
மௌனமாகத் தாங்கும்
பூமியும் ஒரு சுமைதாங்கிதான்.
உன் கவலைகளை உள்வாங்கி,
உனக்குத் தோள் கொடுக்கும்
உண்மையான நட்பும் ஒரு சுமைதாங்கிதான்!

எந்தப் பிரதிபலனும் எதிர்பாராமல்
எல்லோருக்கும் நிழல் தந்து,
சுமை இறக்கி வைக்கும்
அந்தப் பூமரத்திற்குள் இருக்கிறது
இறைவனின் பேரன்பு!

கவிஞர் அக்பர் ஜனுல் முன்சிலா, மருதமுனை

விண்ணிலிருந்து வரும்
மழைத்துளிகள்
மண்ணை அடையும் முன்பே
மனதை நனைத்துவிடுகின்றன.

இப்படித்தான்
சில நட்புகள்.

தூரத்தில் இருந்தாலும்
அவர்களின் தூய அன்பு
மனதை நனைத்துக் கொண்டே இருக்கிறது
எப்போதுமாய்.



முகம் காணாத நாட்களிலும்
அகம் அருகினில் அமர்த்தும்.
இதயங்களின் இணைப்பு
அன்பின் ஆழத்தை உணர்த்தும்.

பேசாத நாட்களிலும்
பாசம் குறைவதில்லை.
நினைக்கும் தருணங்களில்
மனதில் நிலைக்கும்.

தூரத்தைத் தாண்டியும்
தொடரும் நேசம்.
காலத்தைக் கடந்தும்
வளரும் பாசம்.

சொல்லாத புரிதல்களும்,
கேட்காமலே அறிந்துகொள்ளும்
மௌனங்களும்
நட்பின் மொழிகளாகின்றன.

வாழ்க்கை தந்த
வரமே நட்பு.
காலம் கடந்தும்
மனதின் ஈரமாய்த்
தொடர்ந்து நினைக்கும்.

மண்ணில் தங்கும்
மழைத்துளிகள் போல்
மனதில் தங்கிவிடுகின்றனர்
மனத்துளிகளாய்.

அன்றைய நாட்களில்
பண்டிகைகள் மட்டுமே
புத்தாடைகள் சுமந்தன

தீபாவளி வாசனை நுகர
அடிக்கடி திறக்கப்படும்
அலமாரிகள்

வாரக்கணக்கில்
பலகாரக் கடைகளாய்
பவனிவரும் வீடுகள்

கோலநோட்டு முழுவதும்
புதுமைகள் நிறைந்த
அம்மாவின் கண்டுபிடிப்புகள்

வாழ்த்து அட்டைகளால்
நிரம்பி வழியும்
தபால் பெட்டிகள்

இரவு முழுவதும்
மருதாணி பூசிக்கொள்ளும்
போர்வைகள்

அதிகாலை
எண்ணெய்க்குளியலில்
ஆரம்பிக்கும்
அமர்க்களமான
காலைப்பொழுதுகள்

சீனிவெடி திரியை
பற்ற வைப்பதில்
பத்தாவது முறை
வெற்றி கொள்ளும்
என்னைப் போன்ற
பயந்தாங்கொள்ளிகள்



தீபாவளி பட்டிமன்றம்
பார்த்தே தீரும்
ரசனை மாறாத
அப்பாக்கள்

அண்டை வீட்டு
உறவுகள் வரவுகள்
என குதூகளித்த
தீபாவளியின்
எச்சங்களாவது
இன்று
மிச்சப்படட்டும்

வீடுகளின் தனிமையில்
வாழைஇலை நிரப்பாமல்
அன்பின் பகிர்தலில்
மனம் நிரப்பட்டும்
இந்த தீபாவளி

கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

தமிழுரைக்கும் ஐவகை நிலத்தில் குறிஞ்சிபோல்
தமியேன் வாழும் கோவில்பட்டியும் காணப்படுமே;
தமிழாசானாய் அடியேன் பணியாற்றி ஓய்ந்தபின்
தமிழும் நானுமாய் தனித்திருக்க ஓடியதுகாலம்!

தமியேனைத் தமிழ்க்கூடலுக்கு வந்துதம் மாணவரையும்
தமிழால் வாழ்த்தியுரை ஆற்றிச்செல்க வெனவழைத்தது
திரிகூட ராசப்பர் மந்திசிந்தும் கனிகளுக்கென
திருவாய்மலர்ந்தது போல்மந்திகள் வந்துகொஞ்சி விளையாடும்
அருமைமிகு இயற்கைசூழல் கொண்டிலங்கும் ஊத்துப்பட்டி
அரசினர் மேல்நிலைப்பள்ளியது வாழிய! வாழியவே!



பிரியமுடன் வந்திட்ட வழைப்பாலே வந்ததுயென்னுள்
பரவசமூட்டும் ஆனந்தம் அதனொடு அடைந்தேனந்த
பள்ளியையது பற்பல மரங்களோ டிருந்ததாலே தந்தது
பரமானந்தம் என்பேன் இயற்கையை நேசிப்போரே!

குருமலையென்ற மலையின் அடிவாரமந்த பள்ளியிருந்தது;
திருமலை நானோவங்கு நற்றமிழ்ப்பெருமை கூறிடச்சென்றேன்;
ஆருயிர்முருகன் கோயில்கொண்ட கதிரேசன்மலை அடிவாரம்
அடியேன் பணிநிறைவுசெய்த இலக்குமியாலை பள்ளியுமிருக்கும்!
அதனாலென்னவோ இந்தப்பள்ளியை எந்தன்பள்ளியாய்க் கண்டேனே!
உரையாற்ற சென்றவனை வரவேற்றனர் அங்கிருந்தோர்
உள்ளன்போடு வரவேற்றதாலே கூடுதலானந்தம் கொண்டேனே!

கூடுதல்நோக்கம் என்னவென்றும் கூடல்நகரெது வென்றும்
கேட்டென்னுரை தொடங்கி சொல்லநினைத்த பலவற்றுள்
கேட்போர் கேட்டிடும்படி சிலசொல்லி உரைமுடிவில்
கேட்டவிதம் அறிந்திட வினாதொடுத்து விடையளித்தோர்
கண்கள்விரிய பரிசளித்துப் பாராட்டி முடிந்துவிட்ட
காலாண்டுத் தேர்வில் தமிழில் முதலிடம்பெற்ற
கல்வியாளர்க்கும் பரிசளித்து வாய்ப்பளித்த நல்லோருக்கு
கனிச்சாறாம் தமிழில் நன்றியுரைத்து வீடடைந்தபின்
கண்டுகொண்டேன் இரவில்வந்து போகாதலைவலி போனதையே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

தெரியாத மொழி

தெரியாத மொழி பேசும் தேசம்,
தெரிந்ததோ என் மனத்தின் வாசம்.
வார்த்தைகள் புரியவில்லை என்றாலும்,
பார்வைகள் பல கதைகள் சொன்னதே.
புன்னகை ஒன்று போதுமென்று,
புதிய மனிதர்கள் நெருக்கமானார்கள்.
மொழி வேறாக இருந்தாலும்,
மனங்கள் மட்டும் வேறல்ல.
தெரியாத மொழியிலும் அன்பு மட்டும்
என்றும் புரியும் மொழிதான்.



கவிஞர் தம்பிராஜா டிரோன்குமாரி

அரண்மனைகளில்
அதிகாரம் பேசுகிறது.
அடித்தட்டு வீதிகளில்
ஆதங்கம் பேசுகிறது.

ஆடம்பர உலகத்தில்
ஆசைகள் சிறகடிக்கின்றன.
அன்றாட வாழ்விலோ
ஏழைகளின் கனவுகள்
வியர்வையில் கரைகின்றன.



வியர்வையை விதைத்தவன்
விளைச்சலைக் காணவில்லை.
விடியலை எதிர்பார்த்தவன்
விடுதலையை அடையவில்லை.

உழைப்பவனின் கைகளில்
உரிமைகள் இன்னும்
உறங்கிக்கொண்டிருக்கின்றன.
நீதியின் கதவுகள்
சிலருக்கு மட்டும்
திறக்கப்படுகின்றன.

சாமானியனின் வாழ்க்கை
சக்கரத்தின் கீழ்
சிக்கிய கல்லாகிறது.
கவலைகள்
கடலலைகளாக மோதுகின்றன.

ஆனால்,
அவனது வாழ்க்கையோ
இன்னும் வறண்ட நிலம்.

அநீதியின் இருளில்
அவன் ஒரு தீபம்.

அடக்குமுறைக்கு எதிராக
அவன் ஒரு புயல்.
மௌனத்தின் சுவர்களை
உடைத்தெறியட்டும்
அவனது குரல்.

சமத்துவத்தின் விதைகள்
சமூகத்தில் முளைக்கட்டும்.
சாமானியனின் குரல்
சரித்திரத்தின் சங்கநாதமாகட்டும்.
நீதியும் நியாயமும்
நிலையான வாழ்வாகட்டும்.

கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயில்

வருடங்களில்
மாதங்களில்
நாட்களில்
மணி நேரங்களில்
நிமிடங்களில்
தோற்றிருக்கிறேன்
ஏன்
உன்னைப் பார்க்கும் போது
நொடியில் தோற்கிறேன்.

/

வண்ணத்துப் பூச்சியின்
வாழ்வில்
மனஅழுத்தைக் கொண்டு வந்தது யார்
படுக்கையில்
அமர்ந்து கொண்டு
சிறகுகள் விரிக்கிறதே.

/

காலை முதல்
ஒவ்வொரு இடங்களில்
எண்ணும் போதும்
ஆங்காங்கே
ஒன்றோ, இரண்டோ
என்ற முறையில் தான்
புறாக்கள் கிடைத்தது
மாலை
ஐந்து மணிக்கு
தண்ணீர் தொட்டிக்கு
மேலே பாருங்கள்



மொத்தமாக
அந்த
இருபது புறாக்களையும்
ஒன்று சேர பார்க்கலாம்
அதை தான்
நானும் சொல்கிறேன்
அழகு இல்லை
அறிவு இல்லை
அது இல்லை
இது இல்லை
என்று என்னை பாராதே
மொத்தமாக என்
காதலை பார் என்று.

அவன் இவன் எவன் சொல்லியும்
எழுதவில்லை.
எனது சிவன் சொல்லி எழுதுகிறேன்.

நீயோ பிழை. நானோ பிறை.
என்னிடம் என்ன கண்டாய் குறை.?
குறைகுடங்கள் எல்லாம் கூடி
நிறைகுடத்தின் மீது
நம்பிக்கை இல்லாத்தீர்மானம் கொண்டுவந்தன
நீர் எப்படி நிறைந்தது என்று.?
ஏர் பிடித்தவன் எப்படி
எழுத்தைப் படிக்கலாம்? என்று
சமத்துவத்தின் கழுத்தை நெறிப்பது ஆணவத்தின் உச்சம்.
நீங்களோ அகம்பாவத்தின் எச்சம்.

மன்றங்கள் வைத்து மனிதம்
வளர்த்தது அந்தக் காலம்.
மன்றங்கள் வைத்து சாதியை
வளர்ப்பது இந்தக் காலம்.
"யாதும் ஊரே யாவரும் கேளீர்"
என்று உலகை உறவாய் பறைசாற்றியவரை
உரக்கப் படித்துவிட்டு
பிரிவினைக்கு சாமரம் வீசுவது சரியா?



இறைவன் இறங்கி வந்து
சாதியைப் பிரிக்கவில்லை.
இறைவன் பெயரைச் சொல்லி
சமத்துவத்தின் சுவரைபிரிக்கிறாய்.

ஐந்தறிவு ஜீவன்கள் பெயருக்கு
முன்னால் பட்டம் போட்டுக் கொள்வதில்லை.
உனக்கு எதற்குபட்டம்?
என்ன உனது திட்டம்?
ஒருவனை தாழ்ந்தவன் என்று
சொல்லும்போது நீ
பிணத்திற்கு சமமாகிறாய்.
உயர்ந்தவன் என்று ஒருவனை மதிக்கும்
இறைவனின் இதயக்குரல் ஆகிறாய்.

சிந்திப்பதால் ஒருவன் சிந்தனை சிற்பி ஆகமுடியாது.
நாக்கு இருப்பதால் நாவரசன்
ஆக முடியாது.
சமத்துவத்தை எழுத்தின் மூலம்
சமூகத்தில் உளியாக செதுக்கினால் மட்டும் சிற்பி.
பழியற்ற சொற்களை சமூகத்தில்
பரப்பி இலக்கியத்தை இதயத்தில்
விதைப்பவரே நாவரசர்.

இலக்கணப்போலிகளை
மனப்பாடம் செய்தால் மதிப்பெண் கிடைக்கும்.
இலக்கியம் போலிகளை எப்படி படிப்பது?

கவிஞர் முனைவர். அ. ச. மு. முனியாண்டி, திருவில்லிப்புத்தூர்

கண்ணீருக்கு பின்னால்



கண்ணீருக்கு பின்னால்
நான் இல்லை,
நான் செய்யாத
குற்றம் மட்டுமே இருந்தது.

சொல்லாத வார்த்தைக்கு
தண்டனை தந்தாய்,
செய்யாத தவறுக்கு
சாட்சி ஆனேன் நான்.

உண்மை என் பக்கம்
ஊமையாய் நின்றது,
பொய் உன் பக்கம்
உரக்கக் கத்தியது.

என் கண்ணீர்
நீ பார்த்தது இல்லை,
என் வலி
நீ கேட்டது இல்லை.

செய்யாத தவறை
செய்ததாய் சொன்னாய்,
செய்த அன்பையெல்லாம்
மறந்து போனாய்.

காயம் தந்த வார்த்தை
மறந்து விடலாம்,
காயப்படுத்திய நீ
மறக்க முடியுமா?

இன்று அழுகிறேன்
தவறுக்காக அல்ல,
என்னை நம்பாத
உனக்காக.

கவிஞர் ஏ எம் முர்ஷிதா பேகம், இலங்கை

எந்தக் குப்பைகளையும்,
ஓரத்தே ஒதுக்கி விட்டு,
அமைதியாய் ஓடுகிற நதி நான்.

எப்படி அகழ்ந்து,
குரோதங்களைக் கொட்டினாலும் தாங்குகிற,
அகழ்வாரைத் தாங்கும் நிலம் நான்.

ஒருகோடி வன்மங்களைக் கக்கினாலும்,
வெருண்டோடாத,
அதிசயப் பிறவி நான்.

அடி விழுகிற போதெல்லாம்,
வீழ்ந்துவிடாதிருக்க,
அதிவேகமாய் ஓடுகிற,
காட்டாறும் நானே !

என்னைத் தடக்கி விடுங்கள்.
அதுவே நான் ஓய்ந்துவிடாதிருக்க,
நீங்கள் செய்யும் உதவி.

என் எழுதுகோலை,
அபகரியுங்கள்.
ஆயிரம் எழுது கோல்களை,
நானே செய்து கொள்வேன்.

என்னைச் சீண்டிப் பாருங்கள்.
அந்தச் சீண்டலிலேயே,
விஸ்வரூபமெடுத்து,
வியாபிப்பேன்.



வேழமது பலம்
அறிந்திடாது ஒளித்து வைக்கும்
சிறு பிரம்பொத்து சில பொழுதுகள்

வினயமற்ற விடயங்கள்
விட மற்ற கூற்று
வியக்குமிழி யகற்றி
விடையறிய விளையா
நற்பொழுதும் தருவாய்



வேறொரு மனமறியா
வரிக் கொஞ்சும் தூறல்
உன்திருவடி யறியுமென
இந்நெஞ்சமறியும்

முக்கண் பார்வையில்
சிறுதுளி தெளித்து
சிந்தை தெளிவிப்பாயோ
என் இறையே!

கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

திருப்புமுனை தரும் தீபாவளித் திருநாள்
தீயாய் எரிந்திடும் தீமைகளை அறவே
தீர்ப்பாய் அமையும் வெற்றியும் கைகளிலே
தீராமல் பொழியும் அடை மழையாய்!

பட்டாசுப்போல் பறந்திடும் துன்பங்கள் நம்மையே
பட்டாடைப் போல் மின்னிடும் பண்பான செயலும்
பயனோடு பொருள் சேரும் பலகாரமும்
பல்நோக்கு சுமைகளுமே சுமந்திடும் திருநாளே!

பெற்றோரும் கடன்பட்டு கொண்டாடும் வேலை
பணமுடிப்பு செய்திடுமே மறுக்காமல் ஆலை
புத்தாடை வாங்கிடுவர் பெற்றோரும் பிள்ளைக்கு
பட்டாசு கொளுத்திடுவர் பிள்ளைகளும் மகிழ்ந்தே!

இனிமைதரும் இனிப்புகளை இயலாதோர்க்கு வழங்கிடவே
இனியநாள் வருகின்ற இன்னல் தீர்க்குமே
இருப்போரும் இல்லத்தில் வருவோர்க்கு அளித்திடுவர்
இல்லத்தில் மகிழ்ச்சியுமே வெள்ளமாய் நிறைந்திடுமே!



கவிஞர் முனைவர். இரவி சீனுவாசன், உடுமலைப்பேட்டை

விளக்கத் தெரியாத
விசித்திரக் கவிதை!
விலைமதிப்பில்லா
ஒரு வினாடிப் பார்வை!

இதயத்தின் ஓரத்தில்
இடம் பிடிக்கும் மௌனம்,
இரவெல்லாம் தூங்காமல்
இதழோரம் பூக்கும் புன்னகை!

வார்த்தைகள் தோற்கும்
ரகசியப் பார்வை,
வலிகளிலும் இனிக்கும்
ஒரே ஒரு ஆசை!



தொலைவிலும் துடிக்கும்
ஓர் உயிர் தவிப்பு,
நெருங்கிடத் துடிக்கும்
காந்த ஈர்ப்பு!

சுவாசமாய் மாறும்
சொந்த உணர்வு,
வாழ்நாள் முழுமைக்கும்
தேவைப்படும் உறவு!

காதல் என்பது
இரு உடல்கள் அல்ல,
ஒன்றாய் இணைந்த
ஒரே ஒரு நிஜம்!

கவிஞர் அக்பர் ஜனுல் முன்சிலா, மருதமுனை

உயர்வான வாழ்வு

ஏழைகளின் வாழ்வில்தான்
இனிமைகள் பிறந்திடாதோ
இல்லாதவரின் வாழ்வில்தான்
மகிழ்ச்சி தோன்றிடாதோ.

விண்ணுக்கும் மண்ணுக்கும்
அல்லாடும் வாழ்வுதான்
உயிர் நீரான "குடிநீரும்"
விலையாகிப் போச்சுதான்.

விலைவாசி ஏற்றந்தான்
வானம் தொடும் நிலையாட்சி
அல்லும் பகலுமாய் தினம் தினம்
போராட்டம் தான்.

ஏழையின் வாழ்வுதான்
அந்தரத்தில் தொங்குதே
நூலறுந்த பட்டமாய்
திசை மாறி பறக்குதே.

அரை வயிற்றுக் கஞ்சிதான்
ஆனாலும் "அமுதம்" தான்
அது கூட வருங்காலம்
கிடைக்காத நிலைதான்.

ராக்கெட்டாய் உயர்ந்திடும்
விலைவாசி ஏற்றம் தான்
"விசமென" கொல்லுதே
இருப்பவர் வாழ்வென்றும்
தினம் தினம் பண்டிகை தான்.



திருவிழா கொண்டாட்டமெல்லாம்
ஏழைகளுக்கு கனவுதான்
ஒவ்வொரு நாளுமே யுகமா நகருதே.

நாங்க இங்க வாழ்வதே வித்தை போல ஆனதே
எல்லாருக்கும் எல்லாமும் கிடைக்கின்ற
காலம்தான் சமத்துவ வாழ்வுதான்.

சாமானியனின் கனவெல்லாம்
நிஜமாகும் காலம்தான்
உண்மையான வளர்ச்சிதான்
உயர்வான வாழ்வுதான்.

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

மென்மையை மொழியாக்கி,
உண்மையைத் துணையாக்கி,
அமைதியை அணிகலனாக்கி,
என் அகத்தின் அரசியாகிறேன்.

பிடுங்கப்பட்ட சிறகுகளை
மீண்டும் வரைந்து,
காயங்களிலிருந்து உயிர்த்தெழும்
பீனிக்ஸ் பறவையாகிறேன்.



உடைந்த வாழ்வின்
சிதறல்களைக் கலையாக்கி,
சிதைந்த கனவுகளுக்குள்
புது காவியம் படைக்கும்
காவியத் தலைவியாகிறேன்.

படைத்தவனின் துணையோடும்,
துணிவின் ஒளியோடும்,
இருள் வானில்
ஒளித்தாரகைக்கு நடுவில்
பௌர்ணமியாகுகிறேன்.

பொருந்தாத இடத்தில்
என்னைத் தொலைப்பதைவிட,
பொருத்தமான இடத்தில்
பொக்கிஷமாய் மிளிர்கிறேன்.

என் இல்லத்தின்
இளவரசியும் நானே.
என் தேசத்தின்
தேவதையும் நானே.

சத்தமின்றி கதறிடும்
கதறலை மனம் அறிந்திடும்.
ஓசையடக்கி உள்ளம்
வெம்பி மரத்த நிலையில்

யாருமற்ற சாலையில்
கால்கள் விறுவிறுவென
நடைபயிலும்
சிவந்த கண்களோ
சிதற காத்திருக்கும்

விழாத விழிநீரோ பளபளப்பில்
நிக்கட்டுமா நிமிரட்டுமா
நீரும் கதறலையடக்கியே

அடக்கி அடக்கியே அடிமனது
ரணமாகியே
கதறல் கூட கமறிப் போனது
கத்தாத கதறல்
மனதில் நடமாடி நடமாடி
பழதாகிப் போனது மனது

இருளைப் போர்த்திக் கொண்டு
நிமிர்ந்திடும் கதறல்
தன்னை மறந்து தனிமையின்
துணையை நாடி



கவிஞர் சுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டினம்)



சிறகுகளில் வண்ணங்களை
ஏந்தி எட்டுநாள் வாழ்வை
அகங்காரமாக கடக்குமோ
வண்ண பூச்சு

வடைகதை நீள
பாட்டி தொலைத்த பால்நிலவோ
இல்லை பள்ளி மாணவர் தொலைத்த
பலங்கால குறுங்கதைகளோ

நீள்வட்ட நிலவை நீட்டி
சோறுட்டி கை வலித்ததோ
கையில் தந்து
காணொளி காண பிள்ளைக்கு
சோறுட்டும் தாய் கைகளோ.

மண்ணறித்து மண்ணுழுது
மண்ணுண்டு மண்புழுவுக்கு
தலை எங்கிருக்கும் வாள் எங்கிருக்கும்
....

தேன் மலரில் தேனுண்டு
தேடித்தேடி சேகரித்து பதுக்கும்
தேனிக்கு தேள்கொடுக்கென்ன
பகை ஒளிப்பு கவசமோ?

துள்ளி துள்ளி தவழ்ந்து
வெளுரும்
பனித்துளியை தட்டி எழுப்பும்
சூரிய சுடரும் இரவில் எங்கிருக்கும்..

சண்டையிட்டு மோதி பளபளத்து
வெடிவெடிக்கும் இடிமின்னலுக்கு
பகலை விழுங்கி இருளேற்ற
முடியாதா என்ன?

சிந்திப்புக்குள் ஊடுருந்து
அறுந்து விழுந்த
காதல் பட்டங்களைபோல
வெதுவிதுர்த்து கண்கலங்கும் சிறுவர்
கூட்டத்தை விட்டு
வந்ததோ நம் பாலியம்.

கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம் (இலங்கை)

காகிதக் கப்பல்கள்

மாரிக் காலத்தின் வரவுக்குக் காத்திருக்கும்
சிறுவர்கள்! நீரில் ஊறும் காகிதங்கள்
உருப் பெறுகின்றன காகிதக் கப்பல்களாய்!
வண்ணங்கள் பலவாக இருந்தாலும், அதன்
வாழ்நாள் சிறிதளவு நேரமே என்றாலும்
ஈரக் காற்றில் அசைந்தாடி இன்பமாய்
நீரோடும் போக்கில் மிதந்து சென்று
அப்பாவிச் சிறுவர்களை ஆர்ப்பரிக்க வைக்கிறது!
தான்விடும் கப்பல் கரை சேருமா ?
என்கின்ற கவலை சிறுவனுக்கு இல்லை!
புயலடிக்கும் கடலில் புள்ளியாய் படகொன்று!
ஆயிரம் கேள்விகள் அகத்துள் இருந்தாலும்
விதியென்னும் பெருவெள்ளம் அலைக் கழித்தாலும்
இதுவெளம் கடந்து போகுமெனும் நம்பிக்கையே
நம்மை நாளும் வழிநடத்திச் செல்கிறது!
இலக்கை நோக்கி இயன்றவரை போராடி
உள்ளம் தளராமல் ஓடுவதே வாழ்க்கை!
அலையிலாடும் காகிதத்தில் காவியம் போல்
நிலையிலாத மனிதர்கள்! அவர்களுக்கும் உறவுகள்!
காலம் கைகொடுத்தால் கரைசேரும் கப்பலாய்
மானிடர்கள் இப்புவியில் வாழலாம் அன்புடனே!
பின்னாளில் பெரியவராய் மாறிடுவர் சிறுவர்களும்!
காகிதக் கப்பல்கள் எழுப்பிடும் வினாக்கள்!
அகிலத்தில் வாழ்வியலை உணர்த்திடும் விடைகளே!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

எண்ணங்களின் தொகுப்பே கவிதை
எண்ண எண்ண வியப்பூட்டும் பொருள் தரும்
எழும் உற்சாகமான வார்த்தைகள்
ஏழு உலகிலும் கவிதை ஆளலாம்
அழகுமிகு பொருட்களை ரசிக்கும்
கலைகளை கண்டு மனம் வியக்கும்
நிறைய புத்தங்ககளை படிக்க தோன்றும்
கற்பனை திறனை கவிதை தரும்
கவிதையை பாடலாய் பாடலாம்
கவிதை ஒரு சுரங்கம் மனதின் பொக்கிஷம்
மனம் நினைக்கும் எண்ணங்களுக்கு
வர்ணம் கொடுக்கும்
கவிதை நேர்மறை எண்ணங்களை கொடுக்கும்
கற்க கற்க அறிவு கற்றனைக்கு ஊறும்
கல்வி கூடுதலான நற்பண்பு தரும்
காதலிலும் கவிதை வரும்
இன்பமும் இப்பிறப்பில் புலமையையும் தரும்
இன்னல்களை அகற்றிடும்
அறிவு ஜோதி மனதில் தோன்றும்
இனிப்பு போல் கவிதை சுகம் தரும்
இப்பிறப்பில் வானளவு புகழ் தரும்



கவிஞர் லலிதா ஷ்யாம், மதுரை

பின்னோக்கி



செய்தொழிலுக்காய்
பல மைல் தூரம்
சொந்த மண்ணைவிட்டு.

ஊரில் நடக்கும்
திருவிழாக்கள்,
பொது நிகழ்வுகள்
இணைய உதவியால்
காண நேருகையில்,

இதுஎந்த இடம்?
இங்குச் சென்றிருக்கோமா?
ஆம் எனில்,

இங்குதானே
நண்பர் கூட்டத்தோடு
கல்லூரிக் காலங்களில்
திரைப்படம், அரசியல்,
கிரிக்கெட், சமூகம்
என அனைத்தும்
அறிந்ததாய்
விமர்சன நோக்கோடு
அளவளாவினோம்.
அன்றைய நிகழ்வுகள்
பேசி களித்தோம்.

குழுப் படிப்பு
என்ற பெயரில்
கொஞ்சம் படிப்பும்,
நிறைய அரட்டையுமாய்
பொழுதுபோக்கினோம்.

கோயில் காண்கையில்,
கஷ்டச் சிக்கல் நேரத்தில்,
இறைவா, இதிலிருந்து
என்னைக் காப்பாற்று
என மனமுருகினோம்.

வாழ்கின்ற வீடு இருக்கும்
வீதியைக் காண்கையில்,
குறுகிய இடத்தில்
விளையாடிச் சந்தோஷித்தோம்.

படித்த பள்ளி காண்கையில்,
மனம் முழுவதும் பயமற்று
உற்சாகமாய் இருந்தோம்.

திரையரங்கு காண்கையில்,
படம் பார்த்துக்கொண்டிருக்கும் போதே,
இதுதான் கதை,
அடுத்தது இதுதான் காட்சி,
இதுதான் வசனம் எனச் சொல்லி,
சரியாய் இருந்தால் சந்தோஷப்பட்டு,
இல்லையெனில் வருத்தப்பட்டோம்.

என நினைவுகள்!



வாப்பாவிற்கு வாக்கப்பட்ட பின் உம்மாவிற்கு பெரிதாய் ஆசை ஒன்றுமில்லை. புகைபடிந்த அடுப்பங்கரைகளுடனும் அடி கருத்த சோற்றுச் சட்டிகளுடனும் அவட ஆசைகளில் பல ஆவியாகிப்போய் கால் நூற்றாண்டுகளாயிற்று. ஒருநாள் குலைந்து போன சோற்றுக்கும் கருகிப் போன பொரியலுக்கும் வாப்பா, உம்மாவ அவ்வளவு திட்டி யிருக்க தேவையில்லைதான்.

" ஒருநாள் தானே விடு நான் சாப்பிடுறன்" என்டு வாப்பா ஒரு வார்த்தை சொல்லுவாரென்டு உம்மா கொஞ்சம் பேராசப்பட்டு விட்டா.

பட்டிக்காட்டு உம்மாவுடன் பட்டம் முடித்த அண்ணா இப்போதெல்லாம் பேசுவதையே நிறுத்திவிட்டார்.
பேசினால் அவர்ர பவிசு புகுந்த வீட்டில் குறைந்து விடுமென்டு பயமவருக்கு.

அவருக்குத் தெரியா அவர் படிக்க காசு வேண்டுமென்டுஉம்மா இடியப்ப தட்டோட வெந்து போன நேரம் "என்ட புள்ள வளர்ந்து எனக்கு நல்ல வேலக்காரி வச்சி சமச்சு தருவான்" என்டு உம்மா நப்பாசப்பட்டது.

"கழுத்துல கிடந்த கருகமாலையையும் காதுல கிடந்த கால் பவுன் மின்னியையும் உம்மா எனக்கு சீர்வரிசயா தந்துப் புட்டா" என்டு மூத்தக்கா சண்ட போடாத நாளில்ல. அவகென்ன தெரியும்?! மூத்தவள சீர் சிறப்பா புகுந்த வீட்டுக்கு அனுப்ப வேண்டுமென்டு வாப்பாக்கிட்ட இருந்து அந்த கருக மாலையையும் கால்பவுன் மின்னியயும் காப்பாத்த உம்மா என்ன பாடுபட்டாவென்டு...

கவிஞர் அம்னா நசுர்தீன், கிழக்கிலங்கை

இளைய க்காவுக்கு பட்டணத்துல காதல் கைகூடிட்டாம் பெண்வீட்டார் வராவிட்டால் கலியாணம் அமோகமா நடக்குமாம் வலியா இருக்க வாப்பாவும் சாட்சிக்கு வேற ரெண்டு உறவுக்கார ஆம்புளகளும் வந்தா போது மென்று போன வாரம் கலியாண பத்திரிக்கை அனுப்பியிருந்தா...

இளையவளின் கலியாணத்திலேயாவது நான் பெத்த புள்ளயெலெல்லாம் ஒண்டாயிடனும் என்ட உம்மாட ஆச கருக்கலைந்து போனத தவிர அவவுக்கு இளயக்காவின் கலியாணத்துல எல்லாமே சந்தோஷம் தான்...

உம்மா எப்பயுமே ஆகாத கனவுகளை அடிக்கடி என்கிட்ட சொல்லி புலம்பி கொண்டிருப்பா ஒருநாள் இப்படித்தான் திடீரென்டு" மகன், என்ட சந்தூக்க நீயும் மூத்தவனும் தான் தூக்கி போகணும் மன" என்டு உசியத்த சொல்லிப்புட்டு சொல்லாம நிமிந்து படுத்துக்கிட்டா நானும் இல்லாத நம்பரிலெல்லாம் நாநாவ அழைச்சும் "அவர் தொடர்புகளுக்கு அப்பாற்பட்டு விட்டார்" என்டு ஒரு பொம்புள முகத்தில சொல்லிப்புட்டாஒருவேள அது அண்ணியா இருக்குமோ தெரியல

கடைசியில பாடையில கூட உம்மாவின் ஆசைகள் வெறும் ஆசையாகவே போனதல்லா அவவுக்கு சொர்க்கத்த நீ தான் கொடுத்துடல்லா



கவிஞர் அம்னா நசுர்தீன், கிழக்கிலங்கை

உவமை கவிஞர் சுரதா

கட்டுரை

சுரதா (நவம்பர் 23, 1921 - சூன் 20, 2006) தஞ்சாவூர், தமிழ்நாடில் பிறந்தவர் இயற்பெயர் இராசகோபாலன் தமிழகக் கவிஞரும் எழுத்தாளரும் ஆவார். சுரதாவுக்குச் சுலோசனா என்ற மனைவியும், கல்லாடன் என்ற மகனும் உள்ளனர். சீர்காழி அருணாசல தேசிகர் என்பவரிடம் தமிழ் இலக்கணங்களைக் கற்றார். கவிஞர் பாரதிதாசனிடம் கொண்ட பற்றுதலால் பாரதிதாசனின் இயற்பெயராகிய சுப்புரத்தினம் என்பதின் அடிப்படையில் தன் பெயரை சுப்புரத்தினதாசன் என்று மாற்றிக்கொண்டார். தன் மாற்றுப்பெயரின் சுருக்கமாக சுரதாஎன்னும் பெயரில் பல மரபுக்கவிதைத் தொகுப்புகள் தந்தவர். செய்யுள் மரபு மாறாமல் எழுதிவந்த இவர் உவமைகள் தருவதில் தனிப்புகழ் ஈட்டியவர். இதனால் இவரை உவமைக் கவிஞர்என்று சிறப்பித்துக் கூறுவர்.

பாரதிதாசனுடன் தொடர்பு:



1941 சனவரி 14 இல் பாவேந்தர் பாரதிதாசனை முதன்முதல் கண்டு பழகிய சுரதா அவருடன் சிலகாலம் தங்கியிருந்து அவரது கவிதைப் பணிக்குத் துணை நின்றுள்ளார். பாவேந்தர் பாடல்களைப் படியெடுத்தல், அச்சுப் பணிகளைக் கவனித்தல், பாவேந்தரின் நூல் வெளியீட்டிற்குத் துணை நிற்றல் எனப் பல நிலைகளில் பாவேந்தருடன் சுரதாவுக்குத் தொடர்பு இருந்துள்ளது.

கவிதை இயற்றல்:

சுரதாவின் சொல்லடா என்னும் தலைப்பில் அமைந்த கவிதையைப் புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த பொன்னி என்னும் இதழ் 1947 ஏப்பிரல் திங்கள் இதழில் வெளியிட்டு இவரைப் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞராக அறிமுகம் செய்தது.

பாவேந்தரின் புரட்சிக்கவி நாடகம் தந்தை பெரியார், கலைவாணர் முன்னிலையில் நடைபெற்ற பொழுது அந்த நாடகத்தில் அமைச்சர் வேடத்தில் நடித்த பெருமைக்கு உரியவர் சுரதா. அரசவைக் கவிஞராக நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளைஇருந்தபொழுது அவரின் உதவியாளராக இருந்தார்.

நாராயணன் என்பவரை ஆசிரியராகக் கொண்டு புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த தலைவன் இதழின் துணை ஆசிரியராக பணியாற்றினார். அக்காலத்தில் பல சிறுகதைகளை எழுதினார். கவிஞர் திருலோகசீதாராமின் சிவாஜி இதழில் தொடக்கக் காலத்தில் சுரதாவின் கவிதைகள் வெளிவந்துள்ளன. திருச்சிராப்பள்ளி வானொலியில் சுரதாவின் பல கவிதைகள் ஒலிபரப்பாகியுள்ளன.

திரைப்பட துறையில்:

சுரதாவின் கலையுணர்வினைக் கண்ட கு.ச.கிருட்டிணமூர்த்தி என்பவர் இவரைத் திரையுலகத்திற்கு அறிமுகப்படுத்தினார். 1944 ஆம் ஆண்டு மங்கையர்க்கரசி என்னும் திரைப்படத்திற்கு முதன்முதல் உரையாடல் எழுதினார். மிகக் குறைந்த அளவுக்கான பாடல்களையே அவர் எழுதியுள்ளார். சீர்காழி கோவிந்தராஜனின் குரலில் அவரது இரண்டு பாடல்கள், 'அமுதும் தேனும் எதற்கு, நீ அருகினில் இருக்கையிலே எனக்கு', மற்றும் 'ஆடி அடங்கும் வாழ்க்கையடா, ஆறடி நிலமே சொந்தமடா' ஆகியவை. 100 இற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களை எழுதியுள்ளார். கவிஞர் சுரதாவின் முதற்பாடல் எம்.ஜி.ஆர் நடித்த "'என் தங்கை'" படத்துக்காக எழுதப்பெற்ற "ஆடும் ஊஞ்சலைப் போல: அலை ஆடுதே..!" எனும் பாடலாகும்.

எம்.ஜி.ஆருக்கு மிகப்பெரும் திருப்பு முனையை நல்கிய படம் 'நாடோடிமன்னன்.' இப்படத்தில் இருபாடல்கள் கவிஞருடையது."வருக வருக வேந்தே தலையான கலைஞானம் தனைப்போற்றும் தலைவா நீ (வருக) வீரம்

கட்டுரை

உறங்காத தென்னாடு தனையாளுவேந்தே நீ வருகவே பார் புகழும் உதய சூரியனே பசியின்றிப் புவிகாக்கும் பார்த்திபனே (வருக) இப்படம் 1958-ல் வெளிவந்தது. ஜிக்கி குழுவினர் பாடியதாகும். மற்றொரு பாடல்: புகழ்பெற்ற பாடல்: டி.எம்.சவுந்திரராசன் ஜிக்கி பாடியது.

எழுத்துப்பணி:

சுரதாவின் முதல் நூல்" சாவின் முத்தம்". இதனை வி.ஆர்.எம்.செட்டியார் என்பவர் 1946 மார்ச்சு மாதம் வெளியிட்டார். 1956 இல் பட்டத்தரசி என்ற சிறு காவிய நூலை வெளியிட்டார். 1954 இல் கலைஞர் கருணாநிதியின் "முரசொலி"இதழில் தொடர்ந்து கவிதைகள் எழுதி வந்தார்.

1955 இல் காவியம் என்ற வார இதழைத் தொடங்கினார். இவ்விதழைத் தொடர்ந்து இலக்கியம் (1958), ஊர்வலம் (1963), விண்மீன் (1964), சுரதா (1988) எனக் கவிதை வளர்ச்சிக்குப் பல இதழ்களை வெளியிட்டார்.

1971 ஆம் ஆண்டு "ஆனந்தவிகடன்"இதழில் சுரதா திரைப்பட நடிகைகளின் அகவாழ்க்கையைப் பற்றி எழுதிய கவிதைகள் பெரும் வரவேற்பைப் பெற்றன. பின்னாளில் இக்கவிதைகள் தொகுக்கப்பட்டு சுவரும் சுண்ணாம்பும்என்னும் பெயரில் நூல் வடிவம் பெற்றுள்ளது (1974).

பாரதிதாசனின் தலைமாணாக்கராகக் கருதத்தகும் கவிஞர் சுரதா, பல நூல்களாக இருந்த பாவேந்தர் கவிதைகளை ஒரே தொகுப்பாக வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுத் திருவாசகன், கல்லாடன் பெயரில் அந்த நூல் வெளிவரக் காரணமானார். உலகின் அரிய செய்திகளைப் பட்டியலிட்டுக் காட்டும் சுரதா இல்லத்தில் அரிய நூல்கள் கொண்ட நூலகத்தை உருவாக்கினார்.

தமிழ், கவிதை, புகழ் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்ட புரவலர்கள், ஆர்வலர்கள் ஆகியோரை இணைத்துச் சில வினோதக் கவியரங்கங்களை

நடத்துபவராக இருந்தார் சுரதா. படகுக் கவியரங்கம், கப்பல் கவியரங்கம், விமானக் கவியரங்கம் முதலியவை அவை. கவியரங்குகளைக் கொண்டாட்ட நிகழ்வாக மாற்றியதில் அவருக்கு மிகுந்த பங்குண்டு.

பாவேந்தர் தலைமையில் இயங்கிய தமிழ்க்கவிஞர் பெருமன்றத்திற்கு 1966 இல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

பெற்ற சிறப்புகள்:

1969 இல் தேன்மழை என்ற சுரதாவின் கவிதை நூலுக்குத் தமிழக அரசின் பரிசு கிடைத்தது.

1972 இல் தமிழக அரசு சுரதாவுக்குக் கலைமாமணி என்னும் விருது வழங்கிச் சிறப்பித்தது.

1978 இல் ம.கோ.இரா. தலைமையில் அமைந்த அரசு பாவேந்தர் பாரதிதாசன் விருது வழங்கிச் சிறப்பித்தது.

தமிழக அரசு சுரதாவின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவர் குடும்பத்திற்குப் பத்து இலட்சம் உரூவா பரிவுத்தொகை வழங்கியுள்ளது(2007).

1982 இல் சுரதாவின் மணிவிழாவையொட்டி நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில் நடந்த விழாவில் ரூபா அறுபதாயிரம் பரிசாகத் தரப்பெற்றது.

1982 இல் சுரதாவின் கவிதைப் பணிகளைப் பாராட்டிக் குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடந்த விழாவில் கவியரசர் பட்டம் வழங்கப்பட்டது.

1987 இல் மலேசியாவில் நடந்த உலகத்தமிழ் மாநாட்டிற்குச் சிறப்பு அழைப்பாளராக அழைக்கப்பெற்றார்.

1990 இல் கலைஞர் அரசு பாரதிதாசன் விருதினைச் சுரதாவுக்கு வழங்கியது.

1990 இல் கேரளாவில் மகாகவி குமரன் ஆசான் விருது சுரதாவுக்குக் கிடைத்தது.

சுரதாவின் தேன்மழை நூலுக்குத் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ரூபா ஒரு இலட்சம் இராசராசன் விருதுவழங்கப்பட்டுள்ளது.

29.09.2008 இல் சென்னையில் சுரதாவுக்கு நினைவுச்சிலை நிறுவப்பட்டு கலைஞர் கருணாநிதி அவர்களால் திறந்து வைக்கப் பெற்றுள்ளது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் இச்சிலை அமைக்கப்பட்டது.

சுரதா அவர்களின் "சிக்கனம்" என்ற கவிதை இது "சிக்கனம்"

உரைநடையின் சிக்கனம் - கவிதை
ஓங்கும் உணர்ச்சிகளின் சிக்கனம் - அடக்கம்
காதல் வரவேற்பின் சிக்கனம் - பெண்ணின் நாணம்
மாளிகையின் சிக்கனம் - குடிசை
உரிமைகளின் சிக்கனம் - சட்டதிட்டம்
உணவுகளின் சிக்கனம் - பங்கீடு
அரசியலின் சிக்கனம் - இரண்டே கட்சி
அனுபவத்தின் சிக்கனம் - நீதி நூல்கள்.

-சுரதா

மறைவு:

இவர் தன்னுடைய 84ம் வயதில் 2006 சூன் 20 செவ்வாய்க்கிழமை சென்னையில் உடல் நலக்குறைவால் காலமானார்.



நாளை நமதே

தடைகள் வந்தாலும்,

தளராமல்

தொடர்வதே வெற்றி!

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே



முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே தூலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலைலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை



தொடர்புக்கு :

9597887847
8870884969

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com